**MCOP.No. 452/2024**

Date : 16.04.2026

Witness Name & Rank - கீதா - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. எனது மகளுக்கு என்ன பிரச்சனை எதனால் ஆம்புலன்ஸில் சென்றோம் என்றால் எனது மகளுக்கு வைரல் காய்ச்சல் இருந்தது எனவே மருத்துவமனைக்கு சென்றோம். மேற்படி ஆம்புலன்ஸில் சைரன் இயக்கப்பட்டதா என்றால் ஆமாம். பொதுவாக உயிரை காப்பாற்றும் ஆம்புலன்ஸ் வாகனம் வேகமாக செல்லும் எனவே அந்த வாகனத்தின் அதிக வேகத்தால் விபத்து நடக்கவில்லை ஆம்புலன்ஸிக்கு முன்னால் சென்ற பேருந்து வழிவிடாமல் மறித்து நின்றதால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.
2. மேற்படி ஆம்புலன்ஸ் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 3 வது எதிர்மனுதாரர் காப்பீடு விதிமுறை மீறல் உள்ளதால் இழப்பீடு வழங்கப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது மகளுக்கு எந்த காயமும் இல்லை என்றால் அவருக்கு சாதாரண சீராய்ப்பு காயம் தான் இருந்தது எனக்கு எலும்பு முறிவு இருந்தது. எனக்கு மேற்படி விபத்தில் நிரந்தர ஊனம் அல்லது வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது வருமானத்தை காட்ட எந்த ஆவணமும் இல்லை என்பதால் எனக்கு நிரந்தர ஊதியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது மனு 3 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---